***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 133/2017 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | செல்வராஜன் |
| *Father/Husband's Name* | பக்கிரிசாமி |
| *Village* | மேலவாசல் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *74* |

*1,4 வது* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 02.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். கல்யாணசுந்தரம் என்பவரை தெரியும். அவர் 1 வது எதிரியின் தந்தை ஆவார். கல்யாணசுந்தரம் என்பவர் இறந்துவிட்டார். சுதன் என்பவரை தெரியும். 1வது எதிரியின் மகன் ஆவார்.

எனக்கு சொந்தமான இடத்தை ஆஜர் எதிரிகள் குடும்பத்தார்கள் ஆக்கிரமித்தது சம்பந்தமாக எங்களுக்குள் இடப்பிரச்சனை இருந்து வந்தது. எனக்கு சொந்தமான இடத்தில் உள்ள பூவரசுமரத்தை எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். மேற்படி இடம் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்து Stay order வாங்கி வைத்திருந்தேன். கடந்த 12.03.2017 ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் எனக்கு சொந்தமான பூவரசு மரத்தை வெட்டினார். நான் எதிரி ஜீவானந்ததிடம் ஏன் பூவரசு மரத்தை வெட்டினாய் என்று கேட்டேன். நான் எனது மரத்தை வெட்டுவேன். நீ என்ன என்னை கேட்பது என்று குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று என்னை திட்டிக்கொண்டே அரிவாளால் என்னை வெட்டவந்தபோது எனது இடது கை புறங்கையில் உள்ள விரல்களுக்கு மேல் உள்ள முட்டியில் வெட்டிக்காயம் ஏற்பட்டது. (சாட்சி வெட்டுக்காய தழும்பு உள்ளதை காண்பிக்கிறார்). நான் சத்தம்

போடவே எனது மகன்கள் பார்த்தீபன் மற்றும் அன்பு ஆகியோர் ஓடி வந்தார்கள். அதன்பிறகு மீண்டும் 1 வது எதிரி ஜீவானந்தம் என்னை வெட்ட வந்தபோது எனக்கு மயக்கம் ஆகி நான் குனிந்ததால் எனது மகன் பார்த்தீபன் கையால் தடுத்தபோது எனது மகனின் வலது கை நடுவிரல் பகுதியில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. எனது இளைய மகன் அன்பு என்பவர் தடுத்தபோது அவருக்கும் இடது பக்க நெஞ்சில் தோள்பட்டையிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அதன்பிறகு கல்யாணசுந்தரம், சுதன், சகுந்தலா ஆகியோர்கள் எங்களை கையால் அடித்தார்கள். எங்களை எழுந்திரிக்கவே விடவில்லை. நாங்கள் சத்தம் போடவே அருகில் இருந்த கோவிந்தராஜ் மற்றும் லெட்சுமணன் ஆகியோர்கள் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்கள். மேற்படி நபர்கள் தான் 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி எங்களை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அதே வாகனத்தில் எங்களை தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நானும், எனது மகன் பார்த்தீபனும் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்திருக்கலாம். எனது மற்றொரு மகன் அன்பு என்பவர் சிகிச்சையில் இருந்தபோது மருத்துவமனையில் இருந்த டாய்லெட் ரூமில் மயக்கம் அடைந்து விட்டார். அப்போது Attendance எடுக்கும்போது அவர இல்லை என்பது எழுதிக்கொண்டார்கள் என்று கூறினார்கள். பின்னர் எனது மகன் அன்பு மீண்டும் 2, 3 நாட்கள் மருத்துவமனையில் அனுமதிககப்பட்டு சிகிச்சையில் இருந்தார். நான் தஞ்சாவூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்ற அன்றையதினம் மாலை போலீசார் விசாரித்து வாக்குமூலம் எழுதிக்கொண்டார்கள். அதில் என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஜீவானந்தத்தை தவிர 2 முதல் 4 எதிரிகள் கையால் அடித்ததாக மருத்துவமனையில் மருத்துவரிடம் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 2,3, 4 எதிரிகளை தொடர்புபடுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் கையால் அடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் பார்த்தீபன் சிவில் மற்றும் கிரிமினல் வக்கீல் குமாஸ்தாவாக இருந்தார் என்றால் சரிதான். மேலவாசல் என்பது மன்னார்குடிக்கு 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சைக்கிளில் வந்தால் 10

நிமிடம் ஆகும். நாங்கள் எத்தனை மணிக்கு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் 08.30 மணி இருக்கும். 11.00 மணிக்கு மன்னார்குடியில் இருந்து கிளம்பி அனுப்பிவிட்டார்கள் என்றால் 1/2 மணி நேரத்தில் மன்னார்குடியில் இருந்து அனுப்பிவிட்டார்கள். மன்னார்குடி மருத்துவமனையில் புறகாவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். புறக்காவல் நிலைய போலீசார் என்னை வந்து விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

என்னை தஞ்சாவூர் மருத்துவமனையில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மாலை 05.00 மணிக்கு மேல் இருக்கும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் வீடுகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் வடக்கு நடுத்தெரு. வடக்கு நடுத்தெருவில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் எங்கள் தெருவில் மொத்தம் 15 வீடுகள் உள்ளது. மேலவாசல் கிராமத்தில் மொத்தம் ஆயிரம் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கு அருகிலேயே பெருமாள் மாடிவீடு, ராமசாமி வீடு, கென்னடி வீடுகள் ஆகிய வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான்.

இந்த சம்பவம் எனது தெருவில் உள்ள 15 வீடுகளுக்கும் தெரியுமா என்றால் தெரியும். தெருவில் உள்ளவர்கள் யாரும் எனக்கு விரோதிகள் கிடையாது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உள்ள எனது வீடு கிழக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கே ஜீவானந்தம் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் சொல்லுகிற வேலி எனது வீட்டிற்கு மேல்புறமும், எதிரிகள் மனைக்கட்டுகள் கீழ் புறமும் உள்ளது. அந்த கொலலையில் தான் பூவரசு மரம் இருந்தது.

இதே நாளில் இதே நேரத்தில் நான், என்னுடைய மகன் பார்த்தீபன், அன்பு ஆகியோர்கள் மண்வெட்டியால் ஜீவானத்தை காலில் அடித்து காயப்படுத்திவிட்டாரகள் என்றும், நானும், அன்புமும் ஜீவானத்தை கையால் அடித்தும், இறந்த கல்யாணசுந்தரத்தை காலால் உதைத்து காயப்படுத்திவிடடதாக மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.222/2017 ல் இந்நீதிமன்ற ஆண்டு பட்டியல் எண்.111/2017 ல் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். நான் அவ்வாறு செய்யவில்லை. இந்த வழக்கில் சம்பந்தமாக எதிரி ஜீவானந்தத்திற்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பது குறித்து போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை.

மன்னார்குடி சிவில் நீதிமன்றத்தில் நடக்கு வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால் நான் தான் தாக்கல் செய்தேன். மேற்படி சிவில் வழக்கின் Stay உத்தரவை போலீசார் கேட்டாரகளா என்றால் கேட்கவில்லை. நானும் காண்பிக்கவில்லை. சம்பவத்தில் இரத்தம் எல்லாம் பூவரசு மரத்திக்கிட்டே ஊற்றி கிடந்தது. நான் சம்பவம் நடந்த போது நானும், ஜீவானந்தம் தான் இருந்தோம் என்றும் ஜீவானந்தம் என்னை அடித்தபோது நான் சத்தம் போட்டு எனது மகன் பார்த்தீபனும், அன்புமும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் போலீசாரிடம் சொனனேனா என்றால் போலீசார் கேட்கவில்லை சொல்லவில்லை. சம்பவத்தின் போது ஜீவானந்தம் மீண்டும் வெட்டவந்தபோது மயக்கம் ஏற்பட்டு குனிந்துகொண்டதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சம்பவம் நடந்த போது எங்கள் ஊர்க்காரர் யாரும் மறைக்க முற்படவில்லை.

சம்பவம் நடந்தபோது கல்யாணசுந்தரத்திற்கு வயது 70 இருக்கமா என்றால் 77 வயது இருக்கும். சுதனுக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 10 ம் வகுப்பு முடித்திருந்தார். இடப்பிரச்சனை இருப்பது வாஸ்தவம் என்றால் சரிதான். நான் சொல்லும் மரத்திற்கு இடப்பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. மொசுக்கட்டை பட்டாலே அரிக்கும். பூவரசில் மரத்தில் இருந்த மொசுக்கட்டைகளை அழிப்பதற்காக அவர் இடத்தில் இருந்த பூவரசு மரத்தை கழித்து கொண்டார்கள் என்றும், அப்போது நான் தான் பிரச்சனையை துவக்கினேன் என்றும், எனக்கு வலது கை பழக்கம் என்றாலும், நான் வலது கையில் அரிவாளுடனும், எனது மகன் குமாஸ்தா பார்த்தீபன் மண்வெட்டி கழியுடனும் த கராறை துவக்கி பார்த்தீபன் ஜீவானந்தத்தை அடிக்க ஆரம்பித்துவிட்டார் என்றும், அதனால் என் கையில் இருந்த அரிவாள் தான் மறைத்து என்னிடம் இருந்து பிடிங்கும்போது இடது கையில் பட்டது என்றாலும், அதனால் எனது கையில் இருந்த அரிவாள் தான் எனது மகன்களுக்கு காயம் என்றாலும் வம்பிற்கு நான் தான் காயம் என்றாலும், அதனால் தான் எனக்கும், பார்தீபனுக்கு கைகளில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த புகார் கொடுப்பதற்கு முன்பு ஊர்க்காரர்களால் மன்னார்குடி நகர காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கப்பட்டது என்றாலும், இந்த புகார் பின்னிட்டு எனது மகனால் ஜோடித்து கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 133/2017 – P.W. 2 (LW3)***

| | |
|---|---|
| *Name* | அன்பு |
| *Father/Husband's Name* | செல்வராஜன் |
| *Village* | மேலவாசல் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *37* |

*1,4 வது* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 02.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். கல்யாணசுந்தரம் என்பவரை தெரியும். சுதன் என்பவரை தெரியும். எங்களுக்கு சொந்தமான இடத்தை ஜீவானந்தம் குடும்பத்தார் ஆக்கிரமித்து செய்துள்ளார்கள். அது தொடர்பாக சார்பு நீதிமன்றத்தில் எனது அப்பா செல்வராஜன் வழக்கு போட்டுயிருந்தார். ஏற்கெனவே வழக்கு மன்னார்குடி முன்சிப் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு சொத்தின் மதிப்பு அதிகம் காரணமாக மன்னார்குடி சார்பு நீதமன்றத்திற்கு மாற்றப்பட்டது. மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் Stay order கொடுக்கப்பட்டுயிருந்தது.

கடந்த 12.03.2017 ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு பின்னால் உள்ள எங்களுக்கு சொந்தமான பூவரசு மரத்தை எதிரி ஜீவானந்தம் என்பவர் வெட்டிக்கொண்டிருந்தார். நாங்கள் மூவரும் எதிரி ஜீவானந்திடம் நீதிமன்றத்தில் இருந்து தீர்ப்பு வந்தபிறகு வெட்டிக்கொள்ளலாம் என்று கூறினோம். அதற்கு எதிரி ஜீவானந்தம் என்பவர் வேலியை பிரித்து கொண்டு எங்கள் இடத்தில் நுழைந்து குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று திட்டிக்கொண்டே எதிரி ஜீவானந்தம் எனது அப்பாவை இடது கை விரலுக்கு மேல் உள்ள முட்டியில்

வெட்டினார். அதனை தடுக்க வந்த எனது அண்ணன் பார்த்தீபன் வலது கை நடுவிரல் பகுதியில் வெட்டினார்கள். நான் தடுத்த போது என்னையும், எதிரி இடது பக்க நெஞ்சுபகுதியிலும், வலது பக்க தோள்பட்டையிலும் வெட்டினார். (சாட்சி வெட்டுக்காய தழும்பை காண்ப்பிக்கிறார்). நாங்கள் பயந்து கொண்டு ஓடினோம். அப்போது லெட்சுமணன், கோவிந்தராஜ் வந்து விளக்கி விட்டார்கள். அப்போது எதிரி ஜீவானந்தம் எங்களை பார்த்து என்னைக்காக இருந்தாலும் கொல்லாமல் விட மாட்டோம் என்று கூறி மிரட்டிவிட்டு போனார்கள். அதன்பிறகு நான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து அந்த ஆம்புலன்சு மூலம் நாங்கள் மூவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றிருந்தோம். அங்குள்ள மருத்துவர்கள் இங்கு போதிய வசதி இல்லை என்று கூறி தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு உள்நோயாளியாக நான் சுமார் 15 நாட்கள் இருந்திருப்பேன். எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது அப்பாவும், எனது அணணன் பார்த்தீபன் வேறு வார்ட்டில் இருந்தார்கள். நிறைய நாட்கள் இருந்தார்கள். அன்றையதினமே போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு பகுதி முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஜீவானந்தம் எங்கள் மூவரையும் அரிவாளால் வெட்டிய பிறகு உடன் இருந்த கல்யாணசுந்தரம் , சுதன், சகுந்தலா ஆகியோர்கள் கைகளால் எங்களை அடித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 எதிரிகள் எங்களை கையால் அடித்ததாக மருத்துவரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டிற்கு இடையே இருப்பதற்கும், கொல்லைபுறத்தில் இருப்பதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போது இரண்டு வீட்டிற்கும் இடையே உள்ள மரத்தை

வெட்டியதாக சொன்னேனா என்றால் வேலியில் உள்ள மரத்தை வெட்டியதாக சொன்னேன்.

போலீசார் விசாரணையில் எங்கள் வீட்டு கொல்லையில் உள்ள மரத்தை வெட்டியதாக சொல்லியுள்ளேனா என்றால் வேலியில் உள்ள மரத்தை வெட்டியதாக சொல்லியுள்ளேன். வேலி இருவருக்கும் பொது என்றால் சரிதான். மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு வரும்போது மணி என்ன இருக்கும் என்றால் 09.00 மணி இருக்கும். லெட்சுமணன் என்பவர் எங்கள் ஊர் கீழத்தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். லெட்சுமணனுக்கு எங்கள் வீட்டிற்குபக்கத்திலும் வீடு உள்ளது. கோவிந்தராஜீக்கு வீடு மேலவாசல் சாவடிக்கு பின்புறமும், எங்கள் வீட்டில் இருந்து 100 மீட்டர் பின்புறம் உள்ளது என்றால் சரிதான். லெட்சுமணனுக்கு கீழத்தெருவில் உள்ள வீடு எங்கள் வீட்டில் இருந்து 3/4 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

எங்கள் வீட்டை சுற்றி 10, 15 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் எங்களுக்கு விரோதிகள் இல்லை என்றால் யாரும் யாருடனும் பேசமாட்டார்கள். இந்த சண்டையை எங்கள் தெருவில் உள்ள யாரும் மறைக்க முற்படவில்லை. இந்த சண்டை பூவரசு மரத்தடியில் சண்டை. பூவரசு மரத்தடியிலே இரத்தம் கொட்டியது என்றால் சரிதான். எனது முதுகு பக்கத்தில் உள்ள காயத்தை எதிரி ஜீவானந்தம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், முதுகு பகுதியில் உள்ள காயத்தை தற்போது ஜீவானந்தம் ஏற்படுத்தியதாக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

போலீசாரிடம் எனது சட்டைகாண்பிக்கவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் சட்டை ஓட்டையாகிவிட்டது என்று சொன்னேனா எ்னறால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது அண்ணன் பார்த்தீபனுக்கு வலது கை நடுவிரலில் தான் காயம். இதே நாளில் எனது அண்ணன் பார்த்தீபன் மண்வெட்டியால் காலில் அடித்து காயப்படுத்தினார் என்றும், நானும் எனது அப்பாவும் கையால் அடித்து காயப்படுத்திவிட்டதாகவும், அந்த வழக்கில் இதே நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றாலும், அந்த வழக்கில் நானும் ஒரு எதிரி என்றாலும் சரிதான்.

போலீசார் எதிரி ஜீவானந்த்திற்கு எ்வவாறு காயம் ஏற்பட்டது என்று எந்த கேள்வியும் முன்வைத்து கேட்கவில்லை என்றால் சரிதான். மன்னார்குடி அரசு மருத்துவமனையில் போலீசாரை பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது அண்ணன் பார்த்தீபன் என்னை எதனை கேட்டாலும் ஞாபகம் இல்லை என்று

சொல்லி அனுப்பினாரா என்றால் இல்லை. போலீசார் சாட்சியம் அளிக்க சொ்லலிக்கொடுத்தார்களா என்றால் சொ்லலிக்கொடுக்க ஒன்றும் இல்லை.

எனது அப்பா தான் கையில் அரிவாளை வைத்திருந்தார் என்றும், அதனை நாங்கள் பிடிங்க முற்படும்போது எனது அப்பாவிற்கு இடது கையில் பட்டது என்றாலும், எனது அப்பா கையில் இருந்த அரிவாள் தான் எனது அண்ணனுக்கு காயம் என்றாலும், எனக்கும் அந்த அரிவாளால் தான் காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.